[10th July 1957

SRI M. KARUNANITHI : தலைவர் அவர்களே, சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் பிச்சை கேட்பதாக சொல்லப்படுகிறதே, அவ்விதம் பிச்சை கேட்பது நிறுத்தப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்ன படி பிச்சை கேட்பதில் பலதரம் உண்டு.

Smallpox.

* 81 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there were large number of deaths due to smallpox in Coimbatore and Salem districts during 1957 ; and

(*b*) if so, the preventive measures taken by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir. There were 163 deaths in Salem district and 153 in Coimbatore district for the period from 5th January to 20th April 1957.

(*b*) Mass vaccination and revaccination by appointment of additional staff, disinfection of infected houses and materials and isolation and treatment of cases, wherever possible, and educative propaganda on public health, were the preventive measures taken by the Government.

SRI K. R. NALLASIVAM : இந்த அம்மை வகையரு வியாதிகளைத் தீர்ப்பதற்கு ஆங்கில வைத்திய முறைப்படி ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் சித்த வைத்திய முறைப்படி அதைத் தீர்க்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த முறையை கையாண்டு இந்தமாதிரி வியாதிகளைத் தடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON SRI M. A. MANICKAVELU : சித்த வைத்தியத்திற்கு ஆக்கம் அளித்து அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று பொதுமக்கள் கேட்கிறார்கள். அதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படுத்தினால் இந்த விஷயம் கவனிக்கப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த மாவட்டங்களில் பெரும் அளவு வைசூரி நோய் பாதிக்கப்படக் காரணமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : க்ஷய நோயினால் தான் அதிகம்பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

SRI M. S. SELVARAJAN : அம்மை வியாதிக்கு அடிப்படைக் காரண மென்ன ? கிராமங்களில் இயல்பாகவே வேப்பிலை, வேப்பிலைக் கஞ்சி முதலியவற்றால் இந்த வியாதியை நீக்குவது என்று நடைமுறையில் இருந்தது. ஆராய்ச்சியின் முடிவுப்படி அதனால் பலன் உண்டா? பலன் இல்லையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி யாரும் " ஸயன்ட்டிபிக் " முறையில் ஆராய்ச்சி செய்யவில்லை.

SRI A. GOVINDASAMY : அம்மை வரக்காரணம், மாரியம்மனின் சாபம் என்று மக்கள் சொல்கிறார்கள். இதில் அரசாங்கம் நம்பிக்கை வைக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது விஷயமாகப் பலபேர்கள் பலவிதமாக நம்பிக்கை வைக்கிறார்கள். கனம் அங்கத்தினர் புதிதாக ஒரு கொள்கையைக் கொண்டிருக்கிறார். அவர் அபிப்பிராயம் என்னவோ எனக்குத் தெரியாது.

10th July 1957]

SRI K. VINAYAKAM : Is it a fact, Sir, that these preventive measures were pushed to the area long after the disease had created havoc and taken a heavy toll of life in these districts ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir. As soon as information was received, Government took steps but it takes time for the relief operations to take mon ontum. We were sufficiently early in those area to deal with the situation.

SRI S. PAKKIRISAMI PILLAI : புளியமரங்கள் எந்த இடங்களில் நிறைய வளர்கிறதோ அந்த இடங்களில் வைசூரி நோய் உண்டாவதில்லை என்று ஒரு நம்பிக்கை நம்மிடம் இருக்கிற காரணத்தினால், அதுவே அநேக அறிஞர்களுடைய அபிப்பிராயம். இது எதனால் என்பதை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். அதை ஆராய்ச்சி செய்து அது உண்மையானால் எல்லா இடங்களிலும் நிறைய புளிய மரங்கள் நடுவதற்கு மந்திரியவர்கள் திட்டம் போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எனக்குத் தெரிந்த வரையிலே வேப்ப மரங்கள் இருக்கிற இடங்களில் இந் நோய் அணுகுகிறதில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் புளியமரங்கள் இருக்கிற இடத்தில் பிசாசு தான் வரும் என்று சொல்லப்படுகிறது.

SRI P. G. KARUTHIRUMAN : எங்கள் ஊராகிய புளியம்பட்டி என்ற ஊரில், அதைச்சுற்றி நிறைய புளிய மரங்கள் இருக்கின்றன. இருந்தும்கூட அங்கு வைசூரி வருகின்றது. ஆனால் அங்கு பிசாசு கிடையாது.

SRI K. ANBAZHAGAN : " ஸ்மால் பாக்ஸ் " என்ற பெரிய அம்மை தமிழ் நாட்டில் பல காலமாக இருந்து வந்தபோதிலும் இதை நோய் என்று கருதாமல் தெய்வத்தின் சாபம் இது என்று நினைக்கும் மடமை இருக்கிறது. இந்த மடமையை நீக்கவும் இந்த நோயை வராமல் தடுப்பதற்கும், வந்த பிறகு அதை குணப்படுத்தவும் மருந்துகள் ஹோமியோபதியில் இருப்பதாலும் அம்மருந்துகளின் விலையும் குறைவாய் இருப்பதாலும் இந்த மருந்துகளை நாடு முற்றும் மக்களுக்குக் கிடைக்குமாறு பரவச் செய்ய அரசாங்கம் முற்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நம் நாட்டில் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் மாத்திரம் மடமை இல்லை ; அரசியலிலும்கூட மடமை இருக்கிறது.

SRI P. G. MANICKAM : கோயம்புத்தூர் ஜில்லாவில் ப்ளூ ஜுரம் வந்த சமயத்தில் வைசூரி நோயும் பரவி அநேக கிராம மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்கு, அதிகாரிகள் முன் எச்சரிக்கை கொடுக்காததால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆகவே, இனிமேலாவது, கிராமங்களில் தொத்து நோய் பரவும்போது அதிகாரிகள் வேண்டிய முன்னெச்சரிக்கை விடுக்க அரசாங்கம் அந்த அதிகாரிகளுக்கு வேண்டிய எச்சரிக்கை விடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி புதிதாக ஒன்றும் செய்யவேண்டியதில்லை. ஏற்கனவே, இம்மாதிரி எச்சரிக்கை செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டுதான் வரப்படுகிறது.

SRI A. GOVINDASAMY : திரு அன்பழகன் அவர்கள் கேள்விக்கு மந்திரி அவர்கள் நேரிடையாகப் பதில் சொல்லாமல் அரசியலிலும் மடமை இருக்கிறது என்று சொன்னார்கள். அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : அது அவரது இஷ்டம்.